***DEPOSITION OF WITNESS***
***(Chapter XXV BNSS)***

***IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I COURT Mannargudi***
***STC.No. 1394/2017 – P.W. 1 (LW1)***

| | |
|---|---|
| *Name* | கலைமணி |
| *Father/Husband's Name* | நடராஜன் |
| *Village* | மேலவாசல், மன்னார்குடி |
| *Taluk* | |
| *Religion* | |
| *Age* | *55* |

**எதிரி ஆஜர்.**

*Solemnly affirmed in accordance with the provisions of sec 4 of OATH Act 1969 of on the day 25.05.2026.*

***அரசு தரப்பில் முதல் விசாரணை***

1. நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். மேலவாசல் திருமுருகன் அரசு உதவி பெறும் உயர்நிலைபள்ளியில் தலைமை ஆசிரியராக பணி செய்து வருகிறேன். ஆஜர் எதிரி என்னுடன் தொடக்க பள்ளியில் ஆசிரியராக பணிபுரிபவர் ஆவார்.

கடந்த 11.02.2017 ம் தேதியன்று காலை 11.00 மணியளவில் திருமுருகன் உயர்நிலை பள்ளிக்கட்டிடித்தில் பள்ளி கல்விக்குழு கூட்டம் நடைபெற்றது. அந்த கூட்டத்தில் வந்திருந்தவர்களிடையே சச்சரவு ஏற்பட்டு தள்ளுமுள்ளு ஏற்பட்டது. நான் அந்த சம்பவத்தில் கீழே விழுந்துவிட்டேன். எனக்கு ஏற்பட்ட காயத்திற்கு மன்னார்குடி அரசு மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக்கொண்டேன். ஆஜர் எதிரி அந்த கூட்டத்தில் கலந்து கொண்டதால் அவருக்கும், எனக்கும் இருந்த மனவருத்ததின் அடிப்படையில் அவர் தான் என்னை தாக்கியிருப்பார் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் புகார் வாக்குமூலம் அளித்துவிட்டேன்.

2. நீதிமன்றத்தில் காட்டப்படும் புகார் வாக்குமூலம் நான் கொடுத்ததுதான். அதிலுள்ள கையொப்பம் என்னுடையதுதான். **(புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**. இச்சம்பவம் குறித்து போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**(அரசுத்தரப்பில் தன்னுடைய சாட்சி முந்தைய வாக்குமூலத்திற்கு முரணாக சாட்சியம் அளிப்பதால் அவரை, BSA பிரிவு 157 ன் கீழ் விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டது. பரிசீலணைக்கு பின் விசாரணைக்கு அனுமதி வழங்கப்பட்டது).**

**<u>அரசுத்தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. எதிரியுடன் சமரசம் செய்துக்கொண்டு மனு தாக்கல் செய்துள்ளேன் என்றால் - சரிதான். நீதிமன்றத்தில் காட்டப்படும் சமரச மனுவில் நானும் கையொப்பம் செய்துள்ளேன் என்றால் - சரிதான். எதிரி என்னுடன் பணியாற்றுபவர் என்ற முறையில் சமரசம் செய்துக் கொண்டுள்ளேன் என்றால் - சரிதான். (**சமரச மனுவில் உள்ள எனது கையொப்பம் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**).

2. போலிசார் விசாரணையிலும் வாக்குமூலத்திலும் கடந்த 11.02.2017 ம் தேதியன்று காலை 11.00 மணியளவில் திருமுருகன் உயர்நிலை பள்ளிக்கட்டிடித்தில் பள்ளி கல்விக்குழு கூட்டம் நடைபெற்றது. அந்த கூட்டத்தில் ஆஜர் எதிரி தன்னுடைய பதவி உயர்வு குறித்து கேள்வி எழுப்பிய போது நான் தொடக்கப்பள்ளியில் வேலை செய்யும் ஆசிரியர்களுக்கு பதவி உயர்வு வழங்க விதிகளில் இடம் இல்லை என்று கூறியதால் ஏற்பட்ட தகராறில் ஆஜர் எதிரி என்னை தகாத வார்த்தைகளால் திட்டி, கையில் வைத்திருந்த பையில் இருந்த கட்டையால் எனது நெஞ்சு மற்றும் நெற்றியில் குத்தி காயத்தை ஏற்படுத்தி, கழுத்தில் கையை வைத்து தள்ளி உன்னை கொல்லாமல் விடமாட்டேன் என்று கொலை மிரட்டல் விடுத்தார் என்றும் புகார் வாக்குமூலத்திலும், போலீசார் விசாரணையிலும் கூறிவிட்டு தற்போது எதிரி என்னுடன் பணியாற்றுவதால் அவருடன் சமாதானம் செய்து கொண்டு அரசுத்தரப்பிற்கு எதிராகவும், எதிரிக்கு சாதகமாகவும் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் - சரியல்ல.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

இல்லை.

Sd/--J. Tamizhmurugan,
Judicial Magistrate No.I,
Mannargudi.

***DEPOSITION OF WITNESS***
***(Chapter XXV BNSS)***

***IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I COURT Mannargudi***
***STC.No. 1394/2017 – P.W. 2 (LW4)***

| | |
|---|---|
| *Name* | பாலகிருஷ்ணன் |
| *Father/Husband's Name* | குப்புசாமி |
| *Village* | மேலவாசல், மன்னார்குடி |
| *Taluk* | |
| *Religion* | |
| *Age* | *80* |

**எதிரி ஆஜர்.**

*Solemnly affirmed in accordance with the provisions of sec 4 of OATH Act 1969 of on the day 25.05.2026.*

***அரசு தரப்பில் முதல் விசாரணை***

1. நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். மேலவாசல் திருமுருகன் பள்ளியில் தலைமை ஆசிரியராக பணிபுரிந்து பணி ஓய்வு பெற்றுவிட்டேன். அசா.1 மற்றும் எதிரி எனக்கு தெரியும்.

இருவருக்கு என்ன பிரச்சனை என்று எனக்கு தெரியாது. வழக்கு குறித்து எந்த விபரமும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**(அரசுத்தரப்பில் தன்னுடைய சாட்சி முந்தைய வாக்குமூலத்திற்கு முரணாக சாட்சியம் அளிப்பதால் அவரை, BSA பிரிவு 157 ன் கீழ் விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டது. பரிசீலணைக்கு பின் விசாரணைக்கு அனுமதி வழுங்கப்பட்டது).**

**அரசுத்தரப்பில் குறுக்கு விசாரணை**

போலிசார் விசாரணையிலும் வாக்குமூலத்திலும் கடந்த 11.02.2017 ம் தேதியன்று காலை 11.00 மணியளவில் திருமுருகன் உயர்நிலை பள்ளிக்கட்டிடித்தில் பள்ளி கல்விக்குழு கூட்டம் நடைபெற்றது. அந்த கூட்டத்தில் அசா.1 க்கும், ஆஜர் எதிரிக்கும் ஏற்பட்ட தகராறில் ஆஜர் எதிரி அவரை தகாத வார்த்தைகளால் திட்டி, கட்டையால் தாக்கி, கொலை மிரட்டல் விடுத்தார் என்றும், சம்பவத்தை நான் நேரில் பார்த்தேன்

என்றும் கூறிவிட்டு, தற்போது எனக்கே தெரிந்த காரணத்திற்காக அரசுத்தரப்பிற்கு எதிராகவும், எதிரிக்கு சாதகமாகவும் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் - சரியல்ல.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

இல்லை.

Sd/--J. Tamizhmurugan,
Judicial Magistrate No.I,
Mannargudi.

## *DEPOSITION OF WITNESS*
## *(Chapter XXV BNSS)*

## *IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I COURT*
## *Mannargudi*
## *STC.No. 1394/2017 – P.W. 3(LW5)*

| | |
|---|---|
| *Name* | சந்திரன் |
| *Father/Husband's Name* | ஆறுமுகம் |
| *Village* | மேலவாசல், மன்னார்குடி |
| *Taluk* | |
| *Religion* | |
| *Age* | 54 |

**எதிரி ஆஜர்.**

*Solemnly affirmed in accordance with the provisions of sec 4 of OATH Act 1969 of on the day 25.05.2026.*

***அரசு தரப்பில் முதல் விசாரணை***

1. நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். மேலவாசல் திருமுருகன் பள்ளியில் அலுவலக உதவியாளராக வேலை வருகிறேன். அசா.1 மற்றும் எதிரி எனக்கு தெரியும்.

நீதிமன்றத்தில் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள 1 வது கையொப்பம் என்னுடையது தான். **மேற்படி கையொப்பம் அசா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** மேற்படி கையொப்பத்தை நான் சொந்தவேலையாக காவல் நிலையம் சென்றிருந்தபோது போலீசார் கேட்டுக்கொண்டதன் பேரில் செய்து கொடுத்தேன். வழக்கு சம்பந்தமாக எந்த விபரமும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**(அரசுத்தரப்பில் தன்னுடைய சாட்சி முந்தைய வாக்குமூலத்திற்கு முரணாக சாட்சியம் அளிப்பதால் அவரை, BSA பிரிவு 157 ன் கீழ் விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டது. பரிசீலணைக்கு பின் விசாரணைக்கு அனுமதி வழங்கப்பட்டது).**

**அரசுத்தரப்பில் குறுக்கு விசாரணை**

போலிசார் விசாரணையிலும் வாக்குமூலத்திலும் கடந்த 11.02.2017 ம் தேதியன்று காலை 11.00 மணியளவில் திருமுருகன் உயர்நிலை பள்ளிக்கட்டிடத்தில் பள்ளி

கல்விக்குழு கூட்டம் நடைபெற்றது. மேற்படி அந்த கூட்டத்தில் ஆஜர் எதிரிக்கும், அசா.1 க்கும் நடைபெற்ற தகராறு தொடர்பாக மன்னார்குடி நகர போலீசார் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார்கள் என்றும், அதில் சாட்சியாக இருந்து கையொப்பம் செய்து விட்டு, தற்போது எனக்கே தெரிந்த காரணத்திற்காக அரசுத்தரப்பிற்கு எதிராகவும், எதிரிக்கு சாதகமாகவும் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் - சரியல்ல.

<u>**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**</u>

இல்லை.

Sd/--J. Tamizhmurugan,
Judicial Magistrate No.I,
Mannargudi.

***DEPOSITION OF WITNESS***
***(Chapter XXV BNSS)***

***IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I COURT***
***Mannargudi***
***STC.1394/2017 – P.W4 கூடுதல் சாட்சி***

| | |
|---|---|
| *Name* | சி. தங்கதுரை சிறப்பு உதவி ஆய்வாளர்<br>மன்னார்குடி நகர காவல் நிலையம் |
| *Father/Husband's Name* | |
| *Village* | |
| *Taluk* | |
| *Religion* | |
| *Age* | *50* |

*எதிரி ஆஜர்.*

*Solemnly affirmed in accordance with the provisions of sec 4 of OATH Act 1969 of on the day 25.05.2026*

*அரசு தரப்பில் முதல் விசாரணை*

1. நான் தற்போது மன்னார்குடி நகர காவல்நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். இவ்வழக்கின் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து புலன் விசாரணை மேற்கொண்ட உதவி ஆய்வாளர் திருமதி.உஷாதேவி என்பவரின் கையொப்பம் உடன் பணியாற்றிய வகையில் நன்கு தெரியும் என்பதாலும் கால தாமத்தினை தவிர்க்கும்பொருட்டு நீதியின் நலன் கருதி இவ்வழக்கின் ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன்.

2. கடந்த 11.02.2017ம் தேதியன்று மன்னார்குடி நகர காவல் நிலைய உதவி ஆய்வாளர் உஷாராணி நிலைய பொறுப்பில் இருந்தபோது மன்னார்குடி அரசு மாவட்ட தலைமை மருத்துவமனையில் இருந்து கிடைக்கப்பெற்ற தகவலை பெற்று அங்கு உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த மேலவாசலை சேர்ந்த நடராஜன் மகன் கலைமணி எனபவர் கொடுத்த புகார் வாக்குமூலம் கொடுத்தார். **மேற்படி புகார் வாக்குமூலம் அசா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** அதனடிப்படையில் நிலைய மனு எண்42/2017 மனு விசாரணைக்கு பின் 13.02.2017ம் தேதி நிலைய குற்ற

எண்.135/2017 இதச பிரிவுகள் 448, 294(பி) 323, 506(1) ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். **மேற்படிமுதல் தகவல் அறிக்கை அசா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.

வழக்கை மேல்விசாரணைக்கு எடுத்துக்கொண்ட உதவி ஆய்வாளர் அன்றைய தினமே 12.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் சந்திரன் மற்றும் கந்தசாமி ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தினை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் வரைபடம் தயார் செய்துள்ளார். (**பார்வை மகசர் மற்றும் வரைபடம் அ.சா.ஆ.6 மற்றும் 7 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). பட்டியல் சாட்சிகள் 1 முதல் 6 வரையிலானவர்களை தனித்தனியே விசாரித்து வாக்குமூலங்கள் பதிவு செய்துள்ளார்.

5. சம்பவம் உண்மை என தெரியவந்ததும் எதிரியை தேடிய போது முன்பிணையம் பெற்று சென்ற விபரம் தெரிந்து கொண்டார்.

வாதிக்கு சிகிச்சையளித்த மருத்துவர் சிலம்பரசன் மற்றும் கண்ணன் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். **மேற்படி விபத்து பதிவேடு மற்றும் காயச்சான்று அசா.ஆ.8 மற்றும் 9 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.

இத்துடன் அவரது விசாரணையை முடித்து எதிரியின் செய்கையானது 448, 294(பி), 323, 506(1) ன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றம் என குற்ற இறுதியறிக்கை 28.06.2017 ம் தேதி தாக்கல் செய்துள்ளார்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

எதிரிக்கும், இந்த வழக்கிற்கும் எவ்வித தொடர்பு இல்லை என்றும், புகாரை முறையாக விசாரணை செய்யாமல் சாட்சிகளை சரிவர விசாரணை செய்யாமல் சம்பவ இடம் செல்லாமல் எதிரி மீது போடப்பட்ட பொய் வழக்கு என்று சொன்னால் சரியல்ல. வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள சாடசிகளின் வாக்குமூலங்களும், பார்வை மகசர், மாதிரி வரைபடம் ஆகியவற்றில் பின்னிட்டு காவல் நிலையத்திலே வைத்து வழக்கிற்கு ஏற்றாற்போல் தயார் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எதிரியை சொன்ன இடத்தில் சொன்ன நேரத்தில் கைது செய்யவில்லை என்றால் சரியல்ல. சாடசிகள் சொல்லாத சங்கதிகளை வாக்குமூலங்களாக பதிவு செய்துள்ளார் என்றால் சரியல்ல. வழக்கிற்கு ஏற்றாற்போல் தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Sd/--J. Tamizhmurugan,
Judicial Magistrate No.I,
Mannargudi.